திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்பட்டு இருக்கின்ற சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் மொத்தம் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட சமுதாயக் கிணறுகள் மொத்தம் 178.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொடர்ந்து பழுதுபட்டு செயல்படாது இருப்பதை அரசு சீர் செய்து மீண்டும் இறைவைப் பாசனத்துக்குப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பழுதடைந்து தற்போது பயன்படாமல் இருப்பது 115; இதில் பயன்படுத்தவே முடியாதவை 11.

1—4—1974க்கு முன்னதாக ஓய்வுபெற்றவர்களுக்குப் பணிக்கொடை ஓய்வூதியம் போன்ற வசதிகள்

*3820—திரு. மெ. ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகரப் பஞ்சாயத்து போன்றவற்றில் இருந்து 1974 ஏப்ரல் முதல் தேதிக்கு முன்னதாக பதவி ஓய்வு பெற்று பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவற்றை பெறாமல் இருந்தவர்களுக்கும் அந்த வசதிகளை அளிக்க வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம்.

மல்லிகைப் பூவிலிருந்து தைலங்கள் எடுக்கும் தொழிற்சாலை

*4432—திரு. பெ. சு. திருவேங்கடம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், திருவண்ணாமலை, போளூர், கலசப்பாக்கம் பகுதியில் மல்லிகைப்